மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோவில்பட்டி

அ.வ.எண். 218 /2021

வாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் வா.சா.1.

---

பெயர். - திரு.கோமதிநாயகம்

த/பெ. - திரு.கருப்பசாமி

கிராமம் - நாலாட்டின்புத்தூர்

தொழில் - விவசாயம்

தாலுகா - கோவில்பட்டி

வயது - 60.

1872-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2026-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 09-ஆம் நாள் இந்நீதிமன்ற உதவியாளரால் சத்தியப்பிரமாண வாக்குமூலம் செய்யப்பட்டு, நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>முதல் விசாரணை.-</u>

1) நான் இந்த வழக்கில் 1ம் வாதி ஆவேன். 2ம்வாதி எனது மகள் என்பதால் அவருக்கும் சேர்த்து எனது தரப்பு சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை வாதிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | பிராது 1வது தபசிலசொததிற்குரிய பட்டா இணையதளம் பதிவிறக்கம் செய்யப்பட்டது பட்டா எண்.998 வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 2 | 13.01.1993ல் பிராது 2வது தபசில் சொத்திற்கு நத்தம நிலவரித்திட்டத்தில் 1ம்வாதியின் தாயார் வள்ளியம்மாள்,1ம்பிரதிவாதி ராசையா பெயரில் வழங்கப்பட்ட பட்டா எண்.695 அசல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 3. | 03.09.2002ல் 1ம்வாதியின் தாயார் வள்ளியம்மாள்,1ம்வாதிக்குபிராது 3வது தபசில் சொததைப்பொறுத்து எழுதிக்கொடுத்த ஏற்பாடு ஆவணம் அசல் 4 தாள்கள் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 4 | 26.07.2021ல் 1ம்பிரதிவாதி பிராது 3வது தபசில் சொததைப்பொறுத்து 2ம்வாதிக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் அசல் 11 தாள்கள் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 5 | 06.04.2021ல் 1ம்பிரதிவாதி, 2ம்பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சப்ரி நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 6 | 13.09.2021ல் வாதிகள் வழக்கறிஞர் மூலம் 1,2 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.6ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 7 | 14.09.2021ல் வாதிகள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை 1,2 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை எண்ணம் 2 வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 8 | 16.09.2021ல் வாதிகள் அனுப்பியஅறிவிப்பிற்கு 1,2 பிரதிவாதிகள் அனுப்பிய பதில் அறிவிப்பு வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

| | |
|---|---|
| 9 | 08.09.2021 ல் ஆணையர் தாவா இடத்தை பார்வையிட்ட ஆணையர் அறிக்கை மற்றும் சர்வேயர்வரைபடம் நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>குறுக்கு விசாரணை</u> - வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறுதேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
09.01.2026.